தலைப்பு 280 – செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 280 – செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில்,நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும்

கண்காணிப்புதிணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன்

காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 16 திகதிய 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிக்காட்டியின் 3.1 பந்தியின் பிரகாரம் புதிய CIGAS வலை பயன்பாடு அமைப்பிலிருந்து பெறப்பட்ட இறுதி திறைச்சேரி கணக்கு அறிக்கைகள் நிதிக் கூற்றுகளுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் SA-10, SA-11, SA-12, SA-30, SA-50, SA-51, SA-70, SA-80 மற்றும் SA-90 ஆகிய அச்சு பிரதிகள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.	நிதி கூற்று பதிவேடுகள் 09 இல் 06 இற்காககவும் CIGAS வலை பயன்பாடு அமைப்பிலிருந்து பெறப்பட்ட இறுதி திறைச்சேரி கணக்கு அறிக்கைகள் இணைக்கப்பட்டுள்ளதுடன் 03 பதிவேடுகளுக்கு மட்டும் அவை உள்ளக்கப்படவில்லை எனவும் தொடர்புடைய நிதிக் கூற்றுக்களுக்கு தொடர்புடைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	அரச கணக்கள் வழிக்காட்டி பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஆ)	2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிக்காட்டியின் 6 ஆம் பந்தியின் பிரகாரம், காசுப் பாய்ச்சல் கூற்று, காசு மற்றும் குறுக்குப் பதிவுகள் இரண்டும் கருத்திற் கொள்ளப்பட்டு நேரடி முறையை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் காசாக பெறப்பட்ட முற்றபண பெறுவனவுகள் மற்றும் காசினால் மேற்கொள்ளப்பட்ட முற்பண தீர்ப்பனவுகள் மட்டும் கருத்திற் கொள்ளப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், முற்பண பெறுவனவு மற்றும் முற்பண தீர்ப்பனவு ரூபா 2,271,629 வீதம் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் அப் பெறுமதியினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.	முற்பணம் “பீ” கணக்கின் குறுக்குப் பதிவு பெறுமதி ரூபா 2,058,119 ஆன தொகை ஆவதுடன் ஏனைய விடயங்களுக்கான அறிக்கையிடும் நிறுவனங்களினால் முற்பண “பீ” கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ரூபா 213,510 ஆவதுடன், இப் பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,271,629 ஆகும். திவரத்தன்மை இல்லாத காரணத்தினால் இந்த தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படாது செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக அரச கணக்குகள் வழிக்காட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) முற்பண பெறுவனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் கணக்கிடும் போதான பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	திறைச்சேரி அச்சுக் குறிப்பு SA-52 இன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டின் நிதி செயலாற்றல் கூற்றில் முற்பண பெறுவனவு ரூபா 6,313,544 ஆக காணப்பட்ட போதிலும், அது ரூபா 6,162,797 எனவும், முற்பண தீர்ப்பனவு ரூபா 6,187,120 ஆக காணப்பட்ட போதிலும், அது ரூபா 6,036,373 எனவும் காண்பிக்கப்பட்டிருந்தமையினால்அப் பெறுமதிகள் ரூபா 150,747 வீதம் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.	மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் ரூபா 150,747 ஆன தொகை தவறுதலாக இந்த திணைக்களத்தின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளது. அது சீர் செய்வதற்காக மாற்றுச் சீட்டு ஊடாக வரவு மற்றும் செலவு வைக்கப்படும் போது இந்த ரூபா 150,747 தொகையான வேறுபாடு காணக்கூடியதாக இருந்தது.	நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணவு பெறுவனவு மற்றும் தீர்ப்பனவு SA 52 பிரகாரம் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும்.
(ii)	நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முற்பண பீ கணக்கு தொடர்பான அறிக்கை (ACA-5 மாதிரி) திறைச்சேரி அச்சு குறிப்பு SA-52 இல் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியுடன் ஒப்பிடும் போது ரூபா 150,747 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	தவறுகள் சீர் செய்வதற்காக வரவு மற்றும் செலவு வைக்கப்படும் போது இந்த வேறுபாடு காட்டப்படுகின்றது. எனினும், SA 52 மற்றும் ACA 5 மாதிரிகளில் பெறுமதிகள் சமமாக காணப்படுவதாக தெரவிக்கப்பட்டுள்ளது.	நிதிக் கூற்றுக்களுக்குரிய மாதிரிகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) **மீண்டெழும் செலவினம்**

மூலதன செலவின் கீழ் சொத்துக்கள் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 212,400 தொகையான செலவினம் மூலதன கையகப்படுத்தல் என நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.	பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.	நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணவு பெறுவனவு மற்றும் தீர்ப்பனவு SA 52 பிரகாரம் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும்.

(இ) **ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	கடந்த ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் அவ் ஆண்டின் இறுதியில் நிதி அல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 64,604,642 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் அதற்கு நேரொத்த ஆரம்ப மீதி பூஜ்ஜியமாக காண்பிக்கப்பட்டிருந்தது.	ஒருங்கிணைந்த அரச கணக்கியல் முறைமையின் (CIGAS) தொழிநுட்ப கோளாறுகள் காரணமாக ஆண்டின் ஆரம்ப மீதி பூஜ்ஜியமாக காட்டப்பட்டதுடன் அது திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு நிலைமையாகும்.	நிதி அல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதி சரியாக கணக்கிடப்படல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 27,411 ஆன சொத்துக்கள் மற்றும் பிற நிறுவனங்களால் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 582,017 ஆன சொத்துக்கள், நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றில் கொள்வனவுகள் மற்றும் கையளித்தல்கள் (Transfer in) என காண்பிப்பதற்கு பதிலாக, மேற்படி சொத்துக்களின் கூட்டுத்தொகையான ரூபா 609,428 ஆரம்ப மீதிக்கு சேர்க்கப்பட்ட பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்தது.	அனைத்து சொத்துக்களினதும் கையகப்படுத்தல்கள் Open Balance என சொத்துக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், தொடர்புடைய பெறுமதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அச் செத்துக்கள் Transfer In என உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் கொள்வனவு மற்றும் கையளித்தல்கள் சரியாக கணக்கிடப்படல் வேண்டும்.
(iii)	காலப்பகுதியினுள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட மற்றும் கையளிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்படிகளினதும் பெறுமதிகள் சொத்துக்கள் கையகப்படுத்தல் பத்திரங்களில் முறையாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கையகப்படுத்தப்பட்ட 09 உறுப்படிகளில் 07 உறுப்படிகள் மற்றும் கையளிக்கப்பட்ட 08 உறுப்படிகளில் 07 உறுப்படிகளின் பெறுமதி கையளிப்பு பத்திரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	இந்த திணைக்களத்திற்கு கையகப்படுத்தப்பட்ட உறுப்படிகளின் பெறுமதி கையளித்தல் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டிராத போதிலும் முகப்பு கடிதத்தின் ஊடாக அனுப்பப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பொருட்கள் கையகப்படுத்தும் போது பெறுமதிகள் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கையளிக்கப்பட்ட மற்றும் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகள் கையளித்தல் மற்றும் கையகப்படுத்தல் பத்திரகங்களில் முறையாக அறிக்கையிடப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம்

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பின்வரும் கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைய கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்புகள்	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
கடந்த ஆண்டின் நிதி அல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 64,604,642 ஆக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டினன் ஆரம்ப மீதி பூஜ்ஜியமாக காண்பிக்கப்பட்டிருந்தது.	1.6.2 இ (i)

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	4 செலவின விடயங்கள் தொடர்பாக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் கூட்டுத்தொகை ரூபா 5,500,000 இல் ரூபா 3,984,978 பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. அது அச் செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் 57 சதவீதமும் 89 சதவீதமும் இடையான வீச்சில் காணப்பட்டது.	நிதியமைச்சகத்தால் வெளியிடப்பட்ட செலவினக் கட்டுப்பாடு சுற்றறிக்கை மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட செலவு முகாமைத்துவ சுற்றறிக்கையின்படி, இத்திணைக்களத்தின் செலவு முகாமைத்துவம் காரணமாக, மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டை விட குறைந்த அளவு நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டமையினால் சேமிக்கப்பட்டிருந்தது. மென்பொருள் மேம்பாட்டிற்காக (Software Development) மதிப்பிடப்பட்டிருந்தும், அந்த மென்பொருள் உருவாக்கப்படாததால், அந்த நிதியேற்பாட்டில் 89% ஆன சேமிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது.	நி.பி 50 ஏற்பாடுகளின் பிரகாரம் செலவின மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	போதுமான நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாமல், ஆரம்ப மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடான ரூபா 450,000 இற்கு மேலதிகமாக, ரூபா 100,000 நி.பி 66 ஊடாக மாற்றுகை செய்யப்பட்டிருந்தது.	ஆண்டு இறுதியில் வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மற்றும் அமைச்சினால் பராமரிக்கப்பட்டு வந்த வளிபதனாக்கிகள் இந்த திணைக்களத்தின் கீழ் பராமரிப்பதற்கு நேர்ந்தமையினால் தொடர்புடைய சேவை	-மேற்படி-

அவ்வாறு மாற்றப்பட்ட மொத்த நிதியேற்பாடும் அதாவது 100% பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.	ஒப்பந்தங்களுக்கு உடன்படுவதற்கு நேரிட்டமையினால் நிதியேற்பாடு மாற்றுகை செய்வதற்கு நேர்ந்தது. வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் ஊடாக வெளியிடப்பட்ட செலவின கட்டுப்பாட்டு சுற்றறிக்கை பிரகாரம் செலவுகள் முகாமைத்துவம் செய்யப்பட்டமையினால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டது.	

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தினால் 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிக்காட்டியில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கையின் தரவுகளின் வெளிப்பாடுகளில் முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டதுடன், 2024 ஆம் ஆண்டின் செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்குகள் மற்றும் அடையப்பட்ட இலக்குகள் ஆகியவை எண்ரீதியாக குறிப்பிடப்படும் வகையில் செயன் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	அ.நி.சு 2/2020 சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் மற்றும் அத் திணைக்களத்தின் இணையத்தள த்தில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதெனவும், 2024 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மற்றும் அதன் காலாண்டு செயன் முன்னேற்ற அறிக்கையில் தரவுகள் வெளிப்படுத்தும் போது சதவீத அடிப்படையில் காண்பிக்கப்பட்டுள்ள போதிலும், சில இடங்களில் எண்ரீதியான தரவுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, செயன் முன்னேற்ற அறிக்கையில் சில செயற்பாடுகளில் எண்ரீதியான தரவுகள் வெளிப்படுத்தல் பயனுள்ளதாக இல்லாத சந்தர்ப்பங்களில் உதாரணமாக கட்டுப்பாட்டு மற்றும் கணக்கு பிரிவுகளில் தொடர்புடைய 06 தொடக்கம் 08 வரையான செயற்பாடுகள் தொடர்பாக சதவீதமாக மற்றும் மிகவும் பொருத்தமான முறையில் செயன் முன்னேற்றம் காண்பிக்கப்பட்டுள்ளது.	அரச நிதி சுற்றறிக்கைகள் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் ஒப்பிடக்கூடிய பிரகாரம் செயன் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும்.

4.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் பல்வேறு வரிசை அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பெரிய மற்றும் பாரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்கள் 226 காணப்பட்டதுடன், அதில் 120 செயற்திட்டங்கள் தேசிய நிதி மற்றும் கடன் ஊடாகவும், 106 செயற்திட்டங்கள் வெளிநாட்டு கடன் மற்றும் மானியம் ஊடாகவும் நிதியளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த 110 செயற்திட்டங்களில் 23 செயற்திட்டங்கள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், ஆண்டு இறுதியில் செயலாற்றல் பிரச்சினைகளால் 02 செயற்திட்டங்கள் இடை நிறுத்தப்பட்டிருந்ததுடன் 85 செயற்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே, 2024 ஆம் ஆண்டில் செயற்திட்டங்களுக்காக அண்ணளவாக ரூபா 705 பில்லியன் நிதியெற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டு இறுதியில் ரூபா 402 பில்லியன் மட்டும் அதாவது நிதியேற்பாட்டில் 57 சதவீதம் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி விளைவுகள் உருவாக்கம் மேம்படுத்துவதற்கான திணைக்களத்தின் இலக்குகள் முழுமையாக நிறைவேற்றும் விதத்தில் அந் நடவடிக்கைகள் செயற்படுத்துவதற்கு திணைக்களம் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.	இந்த திணைக்களத்தின் ஊடாக பெரிய மற்றும் பாரிய அளவிலான செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி செயன் முன்னேற்றம் மாதாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றதுடன், காலாண்டு ரீதியாக அச் செயன் முன்னேற்றம் மற்றும் சிக்கல்கள் தொடர்பாக அமைச்சரவைக்கு அறிவிக்கப்படுகின்றது. அமைச்சரவையினால் அதற்காக கொடுக்கப்படுகின்ற தீர்மானம் வரிசை அமைச்சின் செயலாளர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றதுடன், திணைக்களத்தினால் இனங்காணப்பட்ட மற்றும் வரிசை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அச் பிரச்சினைகள் தேசிய செயற்பாட்டு மையத்திற்கு சமர்ப்பித்தலும் இந்த திணைக்களத்தினால் மேற்கெள்ளப்படுவதுடன், தொடர்புடைய வசதிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு, செயற்திட்டங்களின் பெதீக மற்றும் நிதி செயன் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளின் பிரகாரம் கையகப்படுத்தும் செயன்முறை அமைச்சின் செயலாளரின் பொறுப்பாகும். செயற்திட்டம் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு வரிசை அமைச்சிற்கு பணிக்கப்பட்டுள்ளதுடன் இந்த திணைக்களத்தினால் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றது.	வளங்கள் உகந்த முறையில் பயன்படுத்தப்பட்டு உடன்பட்ட காலவரையறை மற்றும் கிரயத்தினுள் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி விளைவுகள் அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பிரகாரம் ஆண்டினுள் 79 செயற்திட்ட கள விஜய பரிசோதனைகள் இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 41 செயற்திட்டங்கள் மட்டுமே பரிசோதிக்கப்பட்டிருந்தது.	பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் கள விஜய பரிசோதனைகளை மேற்கொள்ளல்

4.3 பெறுகைகள்

(அ) பெறுகைகள் திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம், பெறுகைத் திட்டம் நடப்பு ஆண்டின் திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2024 ஆம் ஆண்டிற்குரிய பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு உரிய காலத்தினுள் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், தயாரிக்கப்பட்ட திட்டத்திற்குரிய செயன் முன்னேற்றம் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டிற்குரிய பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு தாமதமாகியது.	அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் பெறுகை திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ii)	மென்பொருள் அபிவிருத்திக்கு ரூபா 2,000,000 மற்றும் மென்பொருள் பராமரிப்பிற்கு ரூபா 2,000,000 என கூட்டுத்தொகை ரூபா 4,000,000 மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடாக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அது மீளாய்வாண்டின் பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	வெளிநாட்டு மானியத்தின் கீழ் எங்கள் திணைக்களத்தின் ஊடாக தகவல் அமைப்பொன்று தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டமையினால், மென்பொருள் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டது. எனினும் அது நடைமுறைப்படுத்தப்படாமையின் காரணத்தினால் அது பெறுகை திட்டத்திற்கு உள்ளடக்கப்படாததுடன் மொத்த நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டது.	அனைத்து பெறுகைகளும் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.
(iii)	மென்பொருள் அபிவிருத்திக்காக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் 89 சதவீதம் மற்றும் மென்பொருள் பராமரிப்பிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.		நிதியேற்பாடு, அதிகபட்ச வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) மின்னணு பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அரச நிறுவனங்களுக்கு அரச மின்னணு பெறுகை அமைப்பு அறிமுகப்படுத்தல் தொடர்பான 2018 ஒக்தோபர் 23 திகதிய 05/2018 மற்றும் 2019 திசெம்பர் 17 திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம், அரச பெறுகை நிறுவகங்களை பதிவு செய்தல்,	விலை ஒப்பீட்டு முறைக்கு டயர்கள் மற்றும் பேட்டரிகள் மட்டும் 2024 ஆம் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஆண்டில் மின்னணு பெறுகை	சுற்றறிக்கை பிரகாரம், மின்னணு பெறுகை அமைப்பு பயன்படுத்தப்பட்டு பெறுகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை பதிவு செய்தல், வழங்குநர்களை பதிவு செய்தல், வருடாந்த பெறுகைத் திட்டம் சமர்ப்பித்தல், பெறுகை அறிவித்தலினை பிரசித்திப்படுத்தல், விலை ஒப்பீட்டு முறைக்கு மின்னணு பெறுகை அமைப்பினை பயன்படுத்தல் போன்ற செயல்பாடுகள் அனைத்து அரச நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டினுள் ரூபா 1,449,546 பெறுமதியான டயர்கள் மற்றும் பெட்டரிகள் விலை ஒப்பீட்டு முறையின் பிரகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.	அமைப்பு வாகனங்கள் பெறுவனவிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	

4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தின் பிரதான பணியான செயற்திட்டங்கள் செயன்முன்னேற்ற கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவதற்கு தேவையான அத்தியாவசிய தரவுகள் சேகரித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான ஒரு முக்கிய சாதனமாகப் பயன்படுத்துவதற்கு தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பிற்கு (NDIS) புதிய தொழிநுட்பத்துடன் இணையத்தளம் அடிப்படையிலான செயற்திட்ட கண்காணிப்பு அமைப்பு நிறுவுவதற்கு, 2021 ஆம் ஆண்டில் திறந்த கூறுவிலைகள் அழைக்கப்பட்டு வரி உட்பட ரூபா 135,720,000 பெறுமதிக்கு கம்பனியொன்றிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர்களின் பலவீனமான செயலாற்றல் காரணமாக 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், 2024 திசெம்பர் 31 ஆந் திகதியாகையில், தொடர்புடைய தகவல் அமைப்பு புதுப்பிப்பதற்கு தவறியிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டங்கள் முகாமைத்துவத்தின் போது அவற்றினை மீளாய்வு செய்தல், அறிக்கையிடல், ஒருங்கிணைத்தல், மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகிய சந்தர்ப்பங்களின் போது எழும் பிரச்சினைகளை தீர்ப்பது மற்றும் ஒருங்கிணைத்தலானது குறைந்த வினைத்திறனுடன்	JICA உதவியின் கீழ் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஊடாக புதிய தகவல் அமைப்பொன்று உருவாக்குவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்டங்கள் கண்கானிப்பதற்கும் தகவல் அமைப்பொன்று ஆரம்பிப்பதற்கு தற்போது கலந்துரையாடப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம் இந்த தகவல் அமைப்பு செயற்படுத்துவதன் ஊடாக தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு செலவு திட்ட திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம் ஆகிய 04 திணைக்களங்களுக்கும் நன்மை அடைய முடியும்.	தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பினை விரைவாக உருவாக்கி, பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

நடைமுறைப்படுத்தப்படுவதாக அவதானிக்கப்படுகின்றது.

4.5 முகாமைத்துவ நலிவுகள்

அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அதிகாரத்தின் 4.5 மற்றும் 4.6 பிரவின் பிரகாரம் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி அறவிடப்படல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தின் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 9 ஆண்டுகள் பழைமையான ரூபா 139,921 ஆன கடன் மீதி மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	இந்த உத்தியோகத்தர் சேவை வினைத்திறனின்மையின் காரணமாக ஓய்வுப் பெற செய்வதற்கு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் 2024.09.02 திகதிய கடிதத்தின் ஊடாக இணக்கம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி அறிவிடப்பட முடியும்.	தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

5 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் எதிர்பார்த்த பெறுபேறுகளை அடையும் முன்னேற்றத்தின் மேற்பார்வை மற்றும் மதிப்பாய்வு தொடர்பாக திணைக்களத்தினால் இனங்கண்டிருந்த பணிப்பொறுப்புக்களின் முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இணையத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பு செயற்படு நிலைமையில் காணப்படாமையால், திணைக்களத்தினால் இனங்காணப்பட்ட பின்வரும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் 03 வெற்றி குறிக்காட்டிகள் தொடர்பாக எதுவித முன்னேற்றமும் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.	தற்போது செயற்பாட்டில் உள்ள பெரிய மற்றும் பாரிய செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் காலாண்டு ரீதியில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கின்றமையினால், அத் தகவல்களுக்காக யாரேனும் தரப்பினரும் அணுகி தேவையான தகவல்கள் பெற்றுக் கொள்ள முடிகின்றது. JICA உதவியின் கீழ்	இணையத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பு செயற்படு நிலைமைக்கு கொண்டு வரல் வேண்டும் மற்றும் திணைக்களத்திற்கு பொருத்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை
(i)	இணையத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய அபிவிருத்தி		

தகவல் அமைப்பிற்கு அனுகிய பங்காளர்களின் எண்ணிக்கை (ii) இணையத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பை அணுகுவதில் ஏற்பட்ட தடைகள் தொடர்பாக அறிக்கையிடல் (iii) இணையத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பை குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் அணுகுவதில் ஏற்பட்ட தடைகள் தொடர்பான அறிக்கையிடல் (ஆ) திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய மற்றும் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியிருந்த நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் 03 வெற்றி குறிக்காட்டிகளின் குறிக்கோள்கள் அடைவானது 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. (i) மதிப்பீடு முடிவுகளுக்கான இலகுவான அணுகல் (ii) அபிவிருத்தி பங்காளர்களுடன் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த செயற்திட்ட மீளாய்வுகளின் எண்ணிக்கை (iii) அபிவிருத்தி பங்காளர்களிடம் உள்ள தகவல்களை அணுகல்	தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஊடாக புதிய தகவல் அமைப்பொன்று உருவாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்டங்கள் கண்காணிப்பிற்கும் தகவல் அமைப்பொன்று ஆரம்பிப்பதற்கு தற்போது கலந்துரையாடப்பட்டு வருகின்றது. தற்போது இரண்டு முன்னோடி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இணையத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய அபிவிருத்தி தகவல் அமைப்பு நிறுவும் வரையில் மதிப்பீட்டு தகவல்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எதிர்பார்க்கப்பட்ட 06 அபிவிருத்தி பங்காளர்களில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன மட்டும் 2024 ஆம் ஆண்டினுள் ஒருங்கிணைந்த செயற்திட்ட மீளாய்விற்காக இணக்கம் தெரிவித்தமையினால் 50% சதவீத செயன் முன்னேற்றத்தினை அடைய முடிந்தது.	எடுக்கப்படல் வேண்டும்.

6. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 101 பதவிகளில் திணைக்களத்தின் செயலாற்றலுக்கு நேரடியே தாக்கமளிக்கும் சிரேஷ்ட நிலையில் 10 பதவிகள் உள்ளடங்கலாக 34 பதவிகள் அதாவது 34 சதவீத வெற்றிடங்கள் காணப்பட்டது. அவ்வாறெனினும், குறித்த	நிலவுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.	நிலவுகின்ற வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அல்லது தேவைக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தப்படுவதற்கு திணைக்களத்தினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.